Join Now: https://join.hsslive.in Downloaded from https://www.hsslive.in ®

**SY-512**

**Reg. No. : ......................................**

**Name : ...........................................**

**SECOND YEAR HIGHER SECONDARY EXAMINATION, MARCH 2024**

Part – II

**TAMIL**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**(1 முதல் 10 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் எட்டனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் 1 வீதம்)**

**(8 × 1 = 8 மதிப்பெண்கள்)**

1. வயலும் வயல் சார்ந்த இடமும்.

(அ) குறிஞ்சி (ஆ) முல்லை

(இ) மருதம் (ஈ) நெய்தல்

2. "ஏரினும் நன்றாம் எருவிடுதல் இட்டபின்

நீரினும் நன்றதன் காப்பு" – இக்குறட்பாவில் 'எரு' என்று குறிப்பிடுவது

(அ) உழவு (ஆ) உரம்

(இ) நீர் (ஈ) களை

Join Now: https://join.hsslive.in Downloaded from https://www.hsslive.in ®

3. கீழே தரப்பட்டுள்ள நூல்களுள் எட்டுத்தொகை நூல் எது ?

(அ) முல்லைப்பாட்டு (ஆ) பட்டினப்பாலை

(இ) குறிஞ்சிப்பாட்டு (ஈ) அகநானூறு

4. 'வீரம் செறிந்த தமிழ்நாடு' எனப் போற்றிப் பாடியவர்.

(அ) பாரதிதாசன் (ஆ) பாரதியார்

(இ) இளங்கோவடிகள் (ஈ) கம்பர்

5. 'Stagnation' என்பதன் தமிழாக்கம்.

(அ) தனிமைப்படல் (ஆ) உடன்படல்

(இ) தேக்கம் (ஈ) புனைதல்

6. 'இரலை' என்பதன் பொருள்.

(அ) புலி (ஆ) மான்

(இ) சிங்கம் (ஈ) கரடி

7. 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' – என்று கூறுபவர் ?

(அ) அப்பர் (ஆ) ஔவையார்

(இ) திருமூலர் (ஈ) தாயுமானவர்

8. பின்வருவனவற்றுள் நாட்டுப்புற விளையாட்டில் உட்படாதது.

(அ) கூந்த வண்டி (ஆ) பல்லாங்குழி

(இ) கிட்டிப்புள் (ஈ) கூடைப் பந்து

Join Now: https://join.hsslive.in Downloaded from https://www.hsslive.in ®

9. பாடல்களில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவதை _____________ என்பர்.

(அ) மோனை (ஆ) எதுகை

(இ) அடி மோனை (ஈ) சீர் மோனை

10. மலை மண்டிலம் எனப்படுவது _____________ .

(அ) சேரநாடு (ஆ) பாண்டியநாடு

(இ) சோழநாடு (ஈ) தொண்டைநாடு

**(11 முதல் 18 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம்.) (6 × 2 = 12 மதிப்பெண்கள்)**

11. கீழே தரப்பட்டுள்ள பழமொழி விவசாயத்திற்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதை எழுதுங்கள்.

‘ஆடிப்பட்டம் தேடி விதை’

12. கீழே தரப்பட்டுள்ளவைகளில் நெல் வகைகளின் பெயர்களை தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.

(அன்னமழகி, சோளம், குடவாழை, பார்லி)

13. முதுமை + ஊர் என்ற சொற்கள் புணரும்போது ஏற்படும் மாற்றங்களை எழுதுங்கள்.

14. அறிவியல் நோக்கம் - சிறு குறிப்பு எழுதுங்கள்.

Join Now: https://join.hsslive.in Downloaded from https://www.hsslive.in ®

15. கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.

(அ) நெடுநல்வாடை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.

(ஆ) நெடுநல்வாடை பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.

(இ) நெடுநல்வாடை நூலின் ஆசிரியர் நக்கீரர்.

(ஈ) நெடுநல்வாடை நூலின் ஆசிரியர் கபிலர்.

16. அறுசுவைகளில் ஏதேனும் இரண்டு சுவைகளின் பெயர்களை எழுதுங்கள்.

17. நாட்டுப்புற விளையாட்டுகளில் ஒன்றான கீரை விளையாட்டு பற்றி எழுதுங்கள்.

18. கீழே தரப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படுத்தி எழுதுங்கள்.

(கனல், அண்டம், வெள்ளாமை, உண்டி)

**(19 முதல் 24 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு அரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம்**

**(5 × 4 = 20 மதிப்பெண்கள்)**

19. 'பொங்கலோ பொங்கல்' என்ற பாடப் பகுதியை எழுதிய திரைப்படப் பாடலாசிரியர் கவிஞர் பழநிபாரதி அவர்கள் உங்கள் பள்ளி கலைவிழாவை துவக்கி வைக்க வருகின்றார். அவருக்கு ஒரு பாராட்டுரை தயார் செய்யுங்கள்.

20. நலிவடைந்து வரும் கூத்துக்கலையை மீட்கும் பொருட்டு நீங்கள் முன் வைக்கும் கருத்துகளை எழுதுங்கள்.

21. "நடைப்பயிற்சி நல்ல உடற்பயிற்சி" என்ற தலைப்பில் பெட்டிச் செய்தி தயார் செய்யுங்கள்.

22. பொருத்துக ;

(அ) சிவன் கோயில்களுக்கு விடப்பட்ட நிலங்கள் – திருவிடையாட்டம்

(ஆ) வைணவக் கோயில்களுக்கு விடப்பட்ட நிலங்கள் – பள்ளிச் சந்தம்

(இ) சமண பௌத்த பள்ளிகளுக்கு விடப்பட்ட நிலங்கள் – பிரம்ம தேயம்

(ஈ) பிராமணர்களுக்கத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் – தேவதானம்

Join Now: https://join.hsslive.in Downloaded from https://www.hsslive.in ®

23. 'அய்யங்காளியின் போராட்ட வரலாறு' என்ற தலைப்பில் வானொலி உரை தயார் செய்யுங்கள்.

24. தூயத் தமிழில் எழுதுங்கள்.

"ரெண்டு பயகளும் எங்கல போய்ட்டு வாரீக? மேலப்பட்டியில் துட்டிக்குப் போய்ட்டு வாரோம்சாமி. துட்டிக்குப் போன ஒங்க தெரு ஆட்களெல்லாம் மத்தியானமே வந்துட்டாங்களே ஒங்க ரெண்டுபேத்துக்கு மட்டும் என்னல இம்புட்டு நேரம்? நாங்க ரெண்டுபேரும் கோயில்பட்டி போயி வாரோம் சாமி. கோவில்பட்டியில என்னல சோலி ஒங்களுக்கு?"

**(25 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம்)**

**(4 × 6 = 24 மதிப்பெண்கள்)**

25. 'நடுகல் வெளிப்படுத்தும் பண்பாட்டுச் செய்திகள்' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுங்கள்.

26. "வலைக்குள் வலை" என்ற பாடப்பகுதியை எழுதிய அறிவியல் எழுத்தாளர் ஆர்னிகா நாசர் அவர்கள் உங்கள் பள்ளி திறனறி ஆய்வகத்தை துவக்கி வைக்க வருகைதர உள்ளார். அவரிடம் நேர்காணல் நடத்திட ஐந்து வினாக்கள் அடங்கிய வினா நிரல் தயார் செய்யுங்கள்.

27. கீழே தரப்பட்டுள்ள பாடலை விமர்சனம் செய்து எழுதுங்கள்.

"இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே
வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்
சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்தவற்றைச்
சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே இல்லை யாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும்"

– பாரதிதாசன்

Join Now: https://join.hsslive.in Downloaded from https://www.hsslive.in ®

28. "போதைப் பொருட்களால் ஏற்படும் பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளும்" என்ற தலைப்பில் நாளிதழில் வெளியிடும் பொருட்டு தலையங்கம் தயார் செய்யுங்கள்.

29. அறிவியல் தின விழாவில் உரையாற்றுவதற்காக "தமிழ் இலக்கியத்தில் வானவியல் சிந்தனைகள்" என்னும் தலைப்பில் சொற்பொழிவு உரை தயார் செய்யுங்கள்.

**(30 முதல் 32 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டுப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 8 வீதம்)**

**(2 × 8 = 16 மதிப்பெண்கள்)**

30. பொங்கல் திருநாளையொட்டி உங்கள் பள்ளியில் "உழவர் திருநாள்" என்ற தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கில் வாசிப்பதற்காக "சுற்றுச்சூழலைக் காக்கும் இயற்கை வேளாண்மை" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

குறிப்புகள்:

★ இயற்கை வேளாண்மை
★ நன்மைகள்
★ புவி வெப்பம் குறைதல்
★ இயற்கை உணவு வகைகள்
★ மரவளம் கூட்டுதல்
★ நீர் வளம் பெருக்குதல்
★ நிலவளம் காத்தல்

31. உங்கள் பள்ளி இலக்கிய மலரில் வெளியிடும் பொருட்டு "வாய்மொழி இலக்கியத்தில் பண்பாட்டுக் கூறுகள்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

குறிப்புகள் :

★ வாய்மொழிப் பாடல்கள்
★ தாலாட்டு
★ பிள்ளைப்பேறு
★ காதல்
★ தெய்வ வணக்கம்
★ அருமையான அறிவுரைகள்

Join Now: https://join.hsslive.in Downloaded from https://www.hsslive.in ®

32. உலக ஆரோக்கியத் தினத்தை முன்னிட்டு உங்கள் பள்ளியில் "ஆரோக்கியமான உடம்பிலே ஆரோக்கியமான மனமிருக்கும்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. இதில் பங்குபெற கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்யுங்கள்.

குறிப்புகள்:

★ உடம்பு
★ கடுவெளி சித்தர் கூற்று
★ ஔவையார் கூற்று
★ அப்பர் கூற்று
★ திருமூலர் கூற்று
★ திருவள்ளுவர் கூற்று
★ புகைப்பிடிப்பதால் ஏற்படும் தீமைகள்
★ மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள்

Join Now: https://join.hsslive.in Downloaded from https://www.hsslive.in ®